CC.No. 275/2025 (JM.No.II, DHARMAPURI)

10.11.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜரில்லை)**

**PW–1 : திருமதி.காந்திமதி, க/பெ.முனிராஜ்**

**முதல் விசாரணை**

நான் தாதநாயக்கன்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். இந்த விபத்தில் இறந்து போன முனிராஜ் என்னுடைய கணவர் ஆவார். எதிரியை எனக்கு தெரியாது. 03.09.2024ஆம் தேதியன்று நான் வீட்டில் இருந்த போது அமிர்தபவன் உணவக உரிமையாளர் பூமாலை என்பவர் போனின் மூலம் என்னுடைய கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். A2B அடையார் ஆனந்த பவன் உணவம் அருகே பாரத் பெட்ரோல் பங்க் என்ற இடத்தில் கிழக்கு திசையில் இருந்து மேற்கு திசையை நோக்கி நடந்த போது சேலத்திலிருந்து தருமபுரி நோக்கி வந்த ஆம்பி பேருந்து ஒன்று என் கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக நான் கேள்விப்பட்டு நான் சம்பவயிடத்திற்கு சென்றேன். நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்த போது என்னுடைய கணவருக்கு தலையின் பின்புறத்தில் பலத்த காயம் ஏற்பட்டு, வாய் மற்றும் காதில் இரத்தம் வந்துகொண்டு இருந்தது. கையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அப்போது அரசு ஆம்புலன்ஸ் மருத்துவர் பாரிசோதனை செய்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். பின்பு தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு என் கணவரின் இறந்த உடலை எடுத்து சென்றோம். அங்கு வைத்து பிரேத பாரிசோதனை மற்றும் பிரேத விசாரணை நடைபெற்றது. இது சம்மந்தமாக தொப்பூர் காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், கேள்விப்பட்டு தான் சம்பவயிடம் சென்றேன் என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்கதால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,**
**நீதித்துறை நடுவர் எண்.II,**
**தருமபுரி.**